Registered as a News Paper

மக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்.

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 02 (16 - 06 - 1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 19

## தமிழ் இளைஞர்களிடம் 50 லட்சம் ரூபா மோசடி

சுவிஸ்சிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அனுப்பிவைப்பதாககூறி வடக்கு கிழக்கைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளிடம் இருந்து கடந்த பத்துமாதங்களில் மட்டும் வெளிநாட்டு ஏஜன்சிகள் சுமார் 50 லட்சம் ரூபா வரையில் மோசடி செய்துள்ளன. இது தொடர்பாக கொழும்பு மோசடிப் பிரிவுக்கு 195 புகார்கள் கிடைத்துள்ளதாக கொழும்பு மோசடி புலன் விசாரணைக்குழு தெரிவித்துள்ளதாக அது தொடர்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வெற்றிலைக்கேணியில் படை குவிப்பு

# பெரும் ராணுவ நடவடிக்கைக்கு முஸ்தீபு

## கொம்படியை துண்டிக்க திட்டம்

(நமது நிருபர்)

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் பெருமளவில் சிங்கள இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். பாரிய கடற்படைக் கப்பல்களில இருந்து டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் இவர்கள் தரையிறக்கப்பட்டு வருகின்றனர். இதைத் தொடர்ந்து, இப்பகுதியில் இராணுவ நடவடிக்கை எந் நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம் எனஎதிர் பார்க்கப்படுகிறது. இவ் இராணுவ நடவடிக்கை கொம்படிப் பாதையை துண்டிப்பதற்கான நடவடிக்கையாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிலைகேணி- கட்டைக்காட்டுப் பகுதியில், சில தினங்களாக தரித்துள்ள மூன்று பாரிய கடற்படைக் கப்பல்களில் இருந்து பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் தரையிறக்கப்படுகின்றனர். இக் கடற்பரப்பில் மூன்று பாரிய கப்பல்களும் பல பீரங்கிப் படகுகளும் தறபொழுது தரித்து நிற்கின்றன.

தரையிறங்கும் இராணுவத்தினருடன், டாங்கிகள், கவசவாகனங்கள் சிறுரகப் பீரங்கிகளும், பெருமளவிலான வெடிப் பொருட்களும் தரையிறக்கப் படுவதாக அங்கிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

இங்கு தரையிறக்கப்படும் இராணுவத்தினர் திருமலைத் துறைமுகத்தின் ஊடாகக் கொண்டுவரப்படுவதாகவும் தெரியவருகிறது.

இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்படுவதைத் தொடர்ந்து எவ்வேளையிலும் இப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கபபடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. பெரும்பாலும், கொம்படிப் பாதையை மூடி ஏனைய பகுதிகளுடன் குடாநாட்டிற்கான போக்குவரத்து நடைபெறுவதை தடை செய்வதே நோக்கமாக இருக்கும் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

## பா. மக்கள் கட்சி தலைவர்ராம்தாஸ் கைது

(சென்னை)

தமிழக அரசு அண்மையில் பெரும் விவசாயிகளின் நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு 100 ரூபா கட்டணம் வசூலிக்க தீர்மானித்திருப்பதை ஆட்சேபித்து பாட்டாளி மக்கள் கட்சி மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களை அடுத்து டாக்டர் ராம்தாஸ் உட்பட ஆயிரக்கணக்கான கட்சித் தொண்டர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சென்னையில் இன்று அக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பண்டிருட்டி ராமச்சந்திரன் வெளியிட்ட அறிக்கையில், கைது செய்தவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

## ஜெயலலிதாவின் நிலைப்பாட்டிற்கு கடற்படை தளபதி பாராட்டு

[கொழும்பு]

இந்தியக் கடலோரக் காவற் படையினரின் செயற்பாட்டினால் விடுதலைப் புலிகளின் கடல் நடமாட்டம் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அதற்காக தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் இந்திய அரசையும் பாராட்ட வேண்டும் என்றும் சிறிலங்கா கடற்படைத் தளபதி கிளன்ஸி பெர்னாண்டோ கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், இந்தியக் கடற்படையினர் தமது ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்திருப்பதன் மூலமாக பாக்குநீரிணையில் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது புலிகள் இரு கடற்படையினருக்கும் பொதுஎதிரிகளாகியுள்ளனர். இக்கூட்டு நடவடிக்கை காரணமாக பாக்கு நீரிணை முற்று முழுதாகமூடப் பட்டுவிட்டது என்று அவர் விளக்கினார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை விளம்பரம்

## புலிகள் ஆதரவாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

(சென்னை)

தமிழ்நாடு அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்குவதைத் தீவிரப்படுத்தப்போவதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது

விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு தொடர்புடையவர்களுக்கும், அதற்கு ஆதரவு காட்டுவோருக்கும் எச்சரிக்கை செய்யும் முகமாக சென்னையிலிருந்து வெளிவரும் ஆங்கில தமிழ் நாளிதழ்களில் தமிழக அரசு பெரிய அளவில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

# இராணுவ நடவடிக்கைக்காக வடக்கு 4 வலயமாக பிரிப்பு

(கொழும்பு)

வடக்கை நான்கு வலயங்களாக பிரித்து இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக இராணுவ தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்காகவும், தீவிரவாதிகளை இல்லாதொழிப்பதற்கும் ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வடபகுதி நான்கு இராணுவ வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வலயத்திற்கும் பிரிகேடியர் ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, ஜெரிசில்வா ஆகிய இருவரினதும் வழிகாட்டுதலில் இந்த பிரிகேடியர்கள் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று பாதுகாப்பு வட்டாரத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடபகுதிக்கு இராணுவம் நிலைகொண்டுள்ள இடங்களில மேலும் துருப்புக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கைப்பற்றப்பட்ட சேந்தான்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவம் பாதுகாப்பு அரண்கள் நிர்மாணிப்பதிலும் பங்கர்கள் அமைப்பதிலும் ஈடுபட்டுள்ளதாகவும் தமமை வலுப்படுத்திக் கொண்டபின் மேலும் முன்னேற இருப்பதாக இராணுவ தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று தினங்களில் தாம் கைப்பற்றிய இடங்களிலேயே இராணுவம் நிலைகொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கை கட்டுப்படுத்தினால் ஈழத்தை இல்லாது ஒழிக்கலாம்

**- சிசில வைத்தியரட்ணா**

(கொழும்பு)

ஈழம் என்பதை இல்லாமற் செய்ய வேண்டுமெனின் அந்த எண்ணக்கருவையே இல்லாது ஒழிக்கவேண்டும் என்று இராணுவத் தளபதி சிசில வைத்தியரட்ணா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது ஈழத்திற்கான அடிப்படை அலகு என்பது கிழக்கை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதால் முறியடிக்கப்படும். இதன் மூலம் ஈழம் என்பதன் அடிப்படை எண்ணம் தகர்க்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தையல்ல திருக்கோணமலையைத்தான் விடுதலைப் புலிகள் தமது தலைநகரமாக கற்பனை செய்கின்றனர் என்பதைக் கவனிக்க வேண்டும் எனவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

# மூன்று மாதகாலத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும்

## தமிழ்க்குழுக்கள் கோரிக்கை

(கொழும்பு)

அடுத்த மூன்று மாத காலத்துக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியை கோரியுள்ளன.

வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக தீர்வுக்கான அணுகுமுறையில் அனுகூலமான மாற்றத்தை ஏற்படுத்த நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் பேதம், பிராந்திய பேதம் ஆகியவற்றை மறந்து இப் பிரச்சினையை தமிழ் பேசும் மக்களின் நோக்கில் அணுக வேண்டும் என்பதில் இறுதிநேர முயற்சியில் வெற்றி அளித்திருப்பதாக கொழும்பில் தமிழ் கட்சியின் குழுக்கள் தெரிவித்துள்ளன.

மனத்தாக்கங்களையும் சொல்லொணாத் துயரங்களையும் அளித்துவரும் இப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் ஜனாதிபதியுடன் நெருங்கிய சில வட்டாரங்களின் உறுப்பினர்களும் இத் தமிழ் கட்சியினருக்கு குரல் கொடுக்க இருப்பதாக தெரிய வருகிறது.

---

## ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கூட்டுப் படைத் தலைமையகத்தால் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு நேற்று நண்பகல் முதல் மீளப் பெறப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அலம்பிலில் புலிகள் அதிரடி; 6 படை பலி; மூவர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் அலம்பிலில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியாகினர் மூவர் காயமடைந்தனர்.

நேற்று பகல் 9-50 மணியளவில் அலம்பில் சந்தியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் குழுமுனைப்பக்கமாக வீதித் தடைகளை நீக்கிக் கொண்டிருந்தனர் இவர்கள் மீது முகாமிலிருந்து 150 யார் தூரததில் வைத்து விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதலை நடாத்தினர்.

இவ் அதிரடித் தாக்குதலினால் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் 3 பேர் காயமடைந்தனர் ஏனையோர் முகாமிற்குள் ஓடிவிட்டனர்.

இவர்களிடமிருந்து நவீனரக துப்பாக்கிகளும் வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(முல்லைத்தீவு)

நேற்றுக் காலை அலம்பில் சந்தியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் குமுழமுனை நோக்கி முன்னேறி வந்தபோது விடுதலைப் புலிகளால் அதிரடித் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது. இத் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்:-

- ★ ஏ. கே. எல். எம். ஜி. - 01
- ★ ரி 56 - 2 - 02
- ★ ரி 56 - 1 - 01
- ★ ரி 81 - 1 - 01
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 01
- ★ நடுத்தரரவைகள் - 137
- ★ ரம் மகசின் - 01
- ★ ஏ. கே. எல். எம் ஜி விள் - 76
- ★ ஏ. கே. மகசின் - 06

## புதிய இராணுவ முகாம்

திருக்கோணமலை மாவட்டம் வெருகலில் கடந்த பன்னிரண்டாம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் புதிய முகாமொன்றை அமைத்துள்ளனர்.

## திருமலைக் கிராமங்களில் இராணுவச் சுற்றிவளைப்பு

(திருக்கோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பல தமிழ்க் கிராமங்கள் சிறிலங்கா இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு பல பொதுமக்கள் பிடித்துச் செல்லப்பட்டனர்.

கடந்த பன்னிரண்டாம் திகதி மாவடிச்சேனை, 49 ஆம் கட்டை, முட்டுச்சேனை, வாழைத்தோட்டம் கல்லடி, பின்னையடி, இலங்கைமுகத்துவாரம், இலங்கைத்துறை, கருக்காமுனை, மதுரங்குழி ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பல பொது மக்களை கைது செய்து அடித்துத் துன்புறுத்தினர்.

பின் சிலரை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்று முகாமில் வைத்து கடுமையாக தாக்கிய பின் விடுதலை செய்துள்ளனர்.

## 2 தமிழ்பொதுமக்களை ஊர்காவல்படை கொன்றது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் பூநகரியில் சிங்கள ஊர்காவல படையினர் இரண்டு தமிழ் பொதுமக்களை கத்தியால் வெட்டிக்கொன்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஒன்பதாம் திகதி இடம் பெற்றுள்ளது.

செல்வன்தங்கராசா (வயது 60, பூநகரி ஈச்சிலம்பற்றை) கணபதிப்பிள்ளை தருமராஜா (வயது 38, பூநகரி ஈச்சிலம்பற்றை) ஆகியோரே சிங்கள ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் ஆவர்.

## 15 தமிழ் பொதுமக்களை முஸ்லிம்கள் கடத்தினர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணம் சேரன் குளம் கிராமத்தில் பதினைந்து தமிழர்களை முஸ்லிம்கள் கடத்திச் சென்றுள்ளார்கள். சேரன்குளத்தில் பயணிகள் பஸ் ஒன்றை இடைமறித்து ஆயுதந்தாங்கிய முஸ்லிம் குழுவொன்று பதினைந்து தமிழர்களைத் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளது.

## பதுளையில் இருவர் கைது புலிகளுடன் தொடர்பாம்

பதுளை லுணுகலையில் உள்ள தோட்டப் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையதாக கூறி சந்தேகத்தின் பேரில் இரண்டு இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மேலும் இருவர் தேடப்பட்டு வருவதாகவும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## பதினொரு வேங்கைகளின் நினைவஞ்சலிக் கூட்டம்

(மன்னார்)

மேஜர் வசந்த் உட்பட 11 வேங்கைகளின் இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி பரப்பன்கண்டல் முற்றவெளி அரங்கில் பொதுக் கூட்டமொன்று கடந்த ஞாயிறன்று இடம் பெற்றது.

கிறிஸ்ரி தலைமையில் இடம் பெற்ற இப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அமுதன் அவர்கள் "சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள இடங்களை மீட்டெடுக்க மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மண்மீட்புப் போராட்டத்தை முன்னெடுப்போம்" என்று தெரிவித்தார்.

பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர், சமா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு உண்டு**

சறுத்த கைவலயின் 3கிழமை பேட்டுக் கோழிக் குஞ்சுகளும், 14 போத்தல் கறக்கக் கூடிய ஜே.சி இன பசு மாடும் விற்பனைக்கு உண்டு. ஆர். எஸ் கே.பாம் முருகபதி உடுவில் சுன்னாகம்.

(2678)

**இரசாயனம்**

A/L 93 அசேதன இரசாயனம் ஆரம்பம் 16 - 06 - 1992 செவ்வாய் 4. 15 P m: ஆசிரியர் சத்தீஸ் 108 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்; (2669)

**தொடர்பு பற்றி விசாரணை**

[கொழும்பு]

இருபத்தாறு லட்சம் ருபா பெறுமதியான போதைப் பொருட்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜையான பெருமாள் பாலகிருஷ்ணன் [25வயது] என்பவருக்கு இலங்கையின் மலையகப் பகுதிகளோடு இருக்கும் தொடர்புகள் பற்றி பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பழரசம் மற்றும் இனிப்புப் பொருள்கள் அடைக்கப் பயன்படுத்தப்படும். பைக்கட்டுக்களில் ஹரோயின் போதைப் பொருளைக் கடத்திவந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

**பதிவு செய்யவும்**

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் தற்போதைய சூழ்நிலையால் தொழில் இழந்திருக்கும் மேசன்மார், உதவியாளர்கள், வர்ணம் பூசியவர்கள், சீமெந்துத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட சீமெந்துத் தொழிலாளர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

## 91 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரஜனனம் 06-06-1973



வீரச்சாவு 17-03-1992

### வீரவேங்கை இளங்குன்றன்

(அப்புலிங்கம் ஜெகதீஸ்வரன்)

வேங்கைகள் அணியில் விருப்புடனிணைந்து
எங்களின் மைந்தனே! தங்கமே! செல்வமே!
தாயக மண்ணிது தலை நிமிரும் நாள்வரும், -உன்
பாதச் சுவடுகளில் எம் பாதம் பயணிக்கும்.

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.

குடும்பத்தினர், உற்றார் உறவினர்.

(2672)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 23-9-1971



தமிழ் மண்ணில்: 16-6-1990

### வீரவேங்கை சுயாத்

(நடராசா குமரகுருநாதன்)

## நினைவு கூருகின்றோம் . . .

### 1992-06-16

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மயிலிட்டியைச் சேர்ந்த 3 வயதுப் பெண்குழந்தை. மற்றும் இடைக்காடு மகாவித்தியாலய மாணவன்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**இராமன்** [மாப்பிள்ளை லெப்பை அல்வின் - இறக்காமம், அம்பாறை.]

**கப்டன் ஆனந்** [தங்கையா சுரேஷ்குமார் - இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு ]

**லெப். லக்கி** [வட்டப்பள்ளம், ஏறாவூர், மட்டக்களப்பு.]

**லெப். கஜன்** (ஏறாவூர், மட்டக்களப்பு.]

**ஜூனைட்** [பூபாலபிள்ளை புவிராஜ் - களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு.]

**முரளி** [கிருஸ்ணபிள்ளை முரளி - ஆரையம்பதி, மட்டக்களப்பு ]

**டிக்கின்ஸ்** [கிருஸ்ணபிள்ளை தேவானந்தம் - திருப்பழுகாமம், மட்டக்களப்பு ]

**பசிலன்** [பக்தர் புஸ்பநாதன் - விவேகானந்தபுரம், வெல்லாவெளி, மட்டக்களப்பு.]

**உலகநாதன்** [கனகசபை சுந்தரலிங்கம் - பண்டாரியா வெளி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு ]

**மொறின்** சாமித்தம்பி இராசதுரை - கோயில்போரதீவு, மட்டக்களப்பு.]

**மெடிசன்** [தி. கேதீஸ்வரன் - பெரிய போரதீவு. மட்டக்களப்பு ]

**மொனரா** [லிங்கநாதன் - முனைக்காடு மட்டக்களப்பு]

**சரவணன்** [ஆரையம்பதி, மட்டக்களப்பு ]

**ரங்கன்** ]பதுளை, மலையகம் ]

**எல்லாளன்** [நுவரெலியா, மலையகம் ]

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**ஜெரோம்** [செல்லத்துரை மாணிக்கவாசன் - பெரியகுளம் வீதி, நெடுங்கேணி, மணலாறு ]

**லெப். ஜமால்** [சோமசுந்தரம் தர்மராசா - 133, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி ]

**ரகு** [அருணாசலம் மகேந்திரன் - ஸ்கந்தபுரம், கிளிநொச்சி ]

**ராஜகிளி** [கௌசிகன் வில்வன் - நெடுங்கேணி வீதி, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு ]

**பசுமின்** [மாடாசாமி பாலசுப்பிரமணியம் - 3 ஆம் வாய்க்கால், கிளிநொச்சி ]

**காசிம்** [சுப்பையா பாஸ்கரன் - பாரதிபுரம், கிளிநொச்சி. ]

**சிறி** [கனகசுந்தரம் ஆனந்தராசா - இரத்தினம் பண்ணை, உருத்திரபுரம், கிளிநொச்சி ]

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 12 . 08 . 1927

மறைவு 03 . 05 . 1992

### அமரர் சின்னத்தம்பி கந்தையா

நாம் வாழ இவ்வுலகில் வழிசமைத்து
எம் மேன்மைக்கு உரமிட்ட ஐயா
ஏனையா எம்மை விட்டுச் சென்றீர்
ஆண்டவரின் பாதத்தில் அமைதி காணவோ?

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது நேரிலும், அனுதாப மூலமும் எமக்கு ஆறுதல் வழங்கிப் பல்வேறு வழியிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் அனைவரையும் இன்றைய நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 280,
8, குறுக்கு வீதி,
மணிப்புரி
கொழும்புத்துறை


இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(சி 4452)

## 90-ம் நாள் நினைவஞ்சலி

### தியாகச்சுடர்

வீரப் பிறப்பு :



வீரச்சாவு :

வர்ணம் பூசியவர்கள், சீமெந்து தொழிலாளர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட சீமெந்துத் தொழிலாளர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

இதுவரை 4500 சீமெந்துத் தொழிலாளர்கள் தமதுபெயர்களைப் பதிவு செய்துள்ளதாகவும் ஏனையோர் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் ஒட்டுமடம் ஐயனார் கோவில் வீதியிலுள்ள சங்கப் பணிமனையில் தமது பெயர்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றும் சங்கத் தலைவர் திரு. . அல்

## மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

பருத்தித்துறை (மந்திகை) அரசினர் ஆதார வைத்திய சாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

சாதாரண மருந்து வகைகள், பஞ்சு, பன்டேஜ், குளுக்கோஸ் ஆகியவற்றுக்கு இவ் வைத்திய சாலையில் தட்டுப்பாடு நிலவுகின்றது.

யாழ் சுகாதார அத்தியட்சகர் பிரிவின் முதன்மையான வைத்தியசாலை இதுவேயாகும்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கைஜெயராஜ்
மகேந்திரம் ஜெயந்திரராஜ்

வீரஜனனம் 15.10.1972 வீரச்சாவு 16.06.1990

மண்ணை மதித்தாய்
மண்ணுக்கு நீ ஆளானாய்
கண்ணின் மணியே-என்றும்
எம்நெஞ்சில் நீ நிலைப்பாய்

அப்பா,
அம்மா,
சகோதர, சகோதரிகள்
மல்லாவிமாமா
குடும்பத்தினர்

(2682)



## வீரவேங்கை சுயாத்
### (நடராசா குமரகுருநாதன்)

மாங்குளம் தன்னிலே பகைவரை அழித்திட
வேங்கையாய் பாய்ந்து நீ மாவீரனாய் ஆகி
ஈராண்டு ஓடி மறைந்தாலும்—ஐயா
உருண்டு ஓடுகின்றதே உன் நினைவும் செயலும்:

உன் நினைவால் வாடும்

அம்மா, அப்பா, சகோதர
சகோதரிகள், உறவினர்
நண்பர்கள்

குரும்பசிட்டி, (2662)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை
## ஐம்புலிங்கம் (ஜான்)
து. அனஸ்ரீன்

வீரஜனனம்: 19 - 03 - 1973
வீரமரணம்: 16 - 06 - 1990

வேங்கையின் வீரனாக விண்ணதிரத் துப்பாக்கி தாங்கையில் ஏந்தியுயர் தாயகம் காண்பதற்கு தோழரெனும் வேங்கைகளுடன் நின்னுயிரை நீத்தான் "ஜான்"

உமது பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர், உறவினர்கள்

அந்தோனியார் வீதி,
பருத்தித்துறை. (சி/4528)

ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு ]

**பசுமின்** [மாடசாமி பாலசுப்பிரமணியம் - 3 ஆம் வாய்க்கால், கிளிநொச்சி ]

**காசிம்** [சுப்பையா பாஸ்கரன் - பாரதிபுரம், கிளிநொச்சி. ]

**சிறி** [கனகசுந்தரம் ஆனந்தராசா - இரத்தினம் பண்ணை, உருத்திரபுரம், கிளிநொச்சி ]

**ஜமுனன்** [கந்தசாமி இரத்தினகுமார் - இல. 41, ஏகாடு, உருத்திரபுரம், கிளிநொச்சி ]

**செந்தூரன்** [பாலசுந்தரம் முத்துவாசன் - இல.11, உருத்திரபுரம், கிளிநொச்சி ]

**குணா** [நடராசா இராசவேந்திரன் - 6 ஆம் பிரிவு, இராமநாதபுரம், கிளிநொச்சி ]

**சுஜாத்** [நடராசா குமரகுருநாதன் - குரும்பசிட்டி, புலோலி.]

**விமலன்** (ஐயம்பிள்ளை செல்வராசா - சிறுப்பிட்டி தெறகு, நாவலி.)

**மஜீத்** [இராசு ரமேஸ் - 12/14, மெனடி வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.]

**ஜான் / ஐம்புலிங்கம்** [துரைசிங்கம் அனஸ்ரின் - 4 ஆம் குறுக்குத்தெரு, அந்தோனியார் வீதி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ]

காங்கேசன்துறை 'ஹார்பர்வியூ' விடுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியின்போது வீரச்சாவு எய்திய -

**மேஜர் விவேகன்** [வல்புரம் ரமேசன் - தெணியம்பை, வல்வெட்டித்துறை.]

**கப்டன் அன்சார்** (கனகரத்தினம் சுரேந்திரன் - விளாங்கொடை, தெல்லிப்பழை கிழக்கு.)

**2-ம் லெப். ஸ்ராலின்** (ச. தனபாலசிங்கம் - கப்பல் உடையார் கோயிலடி, வல்வெட்டித்துறை,)

**தரன்** (உதயகுமார் - வேந்தனை, மாவிட்டபுரம் )

**தவா** (பாவேல் ஜெயராஜ் - இல. 57, 4 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**ஜெயராஜ்** (மகேந்திரராஜா ஜெயேந்திரராஜா - மயிலியதனை, வல்வெட்டித்துறை.)

அம்பாறை அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட குஞ்ஞோடைப் பாலத்தைச் சேர்ந்த 4 தமிழர்கள். மற்றும் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மத்திய முகாம் 4 ஆம் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 2 தமிழ் இளைஞர்கள்,

யாழ்-கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் முகாமிலிருந்து மடு நோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய-

**அசோகன்** (சதாசிவம் பரமகுரு - முனைத்தீவு, பெரியபோரதீவு, மட்டக்களப்பு)

வவுனியா - பிராமணாளங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**ஜிம்கெலி** (பாலசிங்கம் ஜெயராசலிங்கம் - வீரபத்திரர் கோயில் வீதி, ஏறாவூர், மட்டக்களப்பு)

**கப்டன் வீரன்** (கணபதிப்பிள்ளை குமார்-அரிப்புத்துறை, முருங்கன், மன்னார்)

**லெப்.நகுலேஸ்** (காளிமுத்து கந்தசாமி - புளியங்குளம், அடம்பன் மன்னார்)

**கீதன்** [ச.சூசைதாஸ்-பனங்கட்டிக்கொட்டு மன்னார்]

**மடுத்தீன்** [ஆறுமுகம் சித்திரவேல் - மாளிகைத்திடல், மன்னார்]

**வல்லவன்** [கதிர்காமத்தம்பி ரவி - பனங்கட்டிக்கொட்டு, மன்னார்]

**லெப்.கபில்** [மகேஸ்வரலிங்கம் சசிகரன் - ஏழாலை தெற்கு, சுன்னாகம்]

**லெப்.செல்வம்** [தர்மதாஸ் விமலதாஸ்-பருத்தித்துறை முனை]

### தியாகச்சுடர்



வீரப் பிறப்பு: 06 — 03 — 1972
வீரச்சாவு: 19 — 03 — 1992

## லெப். ஆதவன் (ஜேம்ஸன்)
### (சுப்பிரமணியம் பிரபாகரன்)

வீழ்ந்தனுவோர் வேங்கையிங்கே வெங்களத்தில் என்றுமிக
ஆழ்ந்ததொருதுயர்கொண்டோம் ஆனாலும்-சூழ்ந்தபடை
தான் தொலைக்கத் துணிவுகொண்டு தானையிலே
தானிணைந்து
வான்சுடராய் வாழ்கின்றான் வையம்

பிரிவால் துயர்கொண்ட
அம்மா, அப்பா, சோதரர்,
உறவினர்,
நக்கீரன்ச.ச.நிலையத்தினர்

மேற்கு முள்ளிவாய்க்கால், அர்வாய் வடக்கு,
முல்லைத்தீவு. (2652)

**லெப்.ஜெராட்** [சரவணமுத்து சிறிஸ்கந்தராஜா - உசன், மிருசுவில்]

**2 ம் லெப். ரவி** (நடராஜா கணேசன் - ஆலய வீதி, காங்கேசன்துறை)

**2-ம் லெப். நிசாந்தன்** [மாணிக்கராசா ஜெயராசா-சங்கத்தானை, சாவகச்சேரி]

**விக்கினேஸ்** [துரைசிங்கம் மனோகரன் - சீனிப்பந்தல், இளவாலை]

**முரளி** [பா. சுகந்தகுமார் - சுன்னாகம்]

**யூதி** [ராஜசேகன் டியூக் - 3-ம் குறுக்குத்தெரு குருநகர் யாழ்ப்பாணம்]

இதே மோதலின் போது விழுப்புண் அடைந்த போராளிகளைத் தூக்கி வரும் பணியின் போது வீரச்சாவெய்திய நாட்டுப்பற்றாளரான

**ஜெயதாஸ்**

ஆனையிறவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**விக்கி** [தியாகராஜா உதயராஜா - ஸ்கந்தபுரம் கிளிநொச்சி]

வவுனியா-மன்னார் வீதி 3-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் வயோதிபர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்
(சி/4555)

## சிந்தனைக்கு

ஒவ்வொரு சோதனையும் நமக்கு வளமான பயனான படிப்பினை ஒன்றைப் போதிக்க இருக்கிறது. நாம் மட்டும் அதைக் கற்கச் சித்தமாயிருந்தால்

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

81, ஸ்டேசன்றோ வீதி, யாழ்ப்பாணம் 16-06-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 65

## இராணுவத் தீர்வு

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதில் திட்டவட்டமான முனைப்புடன் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இதில் சிங்கள ஆட்சியாளர் தரப்பிலோ, அன்றி பௌத்த மதபீடத்திலோ இராணுவ தரப்பிலோ வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. அத்தோடு, விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு தமிழர் தேசிய இனத்தை பலவீனப் படுத்திவிடவும் சிங்கள பேரினவாத அரசு திட்டமிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு எக்கட்டத்திலும் அரசியல் தீர்வு காணப்படமாட்டாது என்பதை இன்றைய இராணுவத்தரப்பினரின் நடவடிக்கைகளும், அறிக்கைகளும் வெளிக்காட்டுகின்றன. ''இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு எத்தனை சமாதானப் பேச்சுக்கள் இடம் பெற்றாலும், புலிகளுக்கு எதிரான தமது போர் தொடரும் என்றும், இராணுவவெற்றி ஈட்டும் வரை போர் ஓயாது என்றும் இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்னா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்னாவின் இக்கூற்று சிறிலங்கா அரசியலில் பலம் பெற்றுவிட்ட ஓர் இராணுவ உயர் அதிகாரியின் தான்தோன்றித்தனமான கூற்று என்று கூறிவிட முடியாது. சிறிலங்கா அரசியல்வாதிகளினதும் ராணுவத் தரப்பினரதும் ஒருங்கிணைந்த ஓர் முடிவின் வெளிப்பாடேயாகும்.

இம்மாதத்தின் தொடக்கத்தில், சிறிலங்கா பிரதம மந்திரியும் பாதுகாப்பு இணை அமைச்சருமான டிங்கிரி பண்டா விஜயதுங்கா இருமாதங்களுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வென்றார். பின்னர் அரசாங்க தரப்பினர் பிரதமர் எதை அடிப்படையில் வைத்துக் கூறினார் என்று தெரியாது அவர் கூறியது போன்று இரண்டு மாதங்களுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என மறுப்புத் தெரிவித்திருந்தனர். ஆனால், அரசாங்கம் தெரியாது எனக் குறிப்பிட்டமை வெறும் ஏமாற்று ஆகும். வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகிய வேளையில், ஓர் பாதுகாப்பு அமைச்சரும், பிரதமருமாகவுள்ளவர் எதுவித அடிப்படையும் இல்லாமல் பேசுகிறார் [illegible]

# உலக சுற்றாடல்பாதுகாப்பு 27 அம்ச றியோ பிரகடனம்

## -154 நாடுகள் கைச்சாத்திட்டன

[றியோ டி ஜெனரோ]

புவி உலக சுற்றாடல் தினம் நேற்றுடன் றியோடி ஜெனரோவில் முடிவடைந்த வேளையில் இதுதொடர்பான ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இயற்கை புவி சுற்றாடல் வருங்கால பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஏராளமான ஆவணங்கள் இவ் உச்சி மாநாட்டின் பயனாக தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் அனேகமான ஆவணங்களில் புவி நடுக்கம் குறித்து அங்கத்துவ நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவுவதால் உறுதியான உடன்படிக்கைகளுக்கு பதிலாகபிரகடனங்கள் கொள்கை அறிக்கைகள் என்பனவே கூடுதலாக வெளியிடப்பட்டுள்ளன.

இருபத்தியேழு அம்சங்களைக்கொண்ட றியோ பிரகடனம் நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

நீடித்த அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான அடிப்படை வழிகாட்டுதல் நெறிகளைக் கொண்டதாக மேற்படி ஆவணம் அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் உடன்படிக்கைகளாக மாற்றப்பட இருக்கும் இரண்டு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

154 நாடுகள் இவ் அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

உலக சுற்றாடல் பாதுகாப்பு வழிகள், அருகிவரும் உயிரினங்கள் காப்பாற்றும் வழிகள் என்பன சம்பந்தமாக இவ் அறிக்கையின் பொருளடக்கத்தில் கருத்து வேறுபாடு நிலவியதால் சுமார் 20 நாடுகள் இதில் கைச்சாத்திட தயக்கம் காட்டின.

எனினும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்காக வளர்ச்சி அடைந்த நாடுகளிடம் இருந்து நிதியுதவி பெறுவதற்கான உறுதியான வாக்குறுதிகளைப் பெற இம்மாநாடு தவறிவிட்டதாக அவதானிகள் கூறியுள்ளனர்.

# அகில இந்திய அளவில் பொது வேலை நிறுத்தம்

(டில்லி)

இந்தியாவின் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து தொழிற்சங்கங்கள் அனைத்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளன.

இன்று நடைபெறவுள்ள இவ்வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய தொழிலாளர் இணையமைச்சர் திரு. பி. ஏ. சன்மா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் புதுடில்லி தொலைக்காட்சியில் உரையாற்றிய திரு. சன்மா பிரதமர் பி. வி. நரசிம்மராவ் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு மாற்றாக எதிர்க்கட்சிகள் வேறு கொள்கை முறைகளைத் தெரிவிக்கலாம் என பாராளுமன்றத்தில் கூறியதைச் சுட்டிக்காட்டியதுடன் ஆனால் எதிர்க்கட்சிகள் யோசனைகள் எதனையும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்த அவர் மேலும் தொழிலாளர் நலன் பேணப்படும் இன்றைய சூழலில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

எனினும் இடதுசாரி தொழிற்சங்கங்கள் நடாத்த உத்தேசித்துள்ள இவ்வேலை நிறுத்தத்தின் போது தகாத சம்பவங்கள் ஏதும் நடக்காமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு சுமார் 8000 பேரளவில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை தொடர்பாகத் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு. கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர். உமாநாத் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### ராக்கட் தொழில் நுட்பம்

# வாக்குறுதி அளித்தபடி இந்தியாவிற்கு அளிப்போம்

(மொஸ்கோ)

இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்தபடி ராக்கட் தொழில் நுட்பத்தை வழங்க தமது ஸ்தாபனம் நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளதாக ரஷ்ய விண்வெளி ஏஜென்சியின் தலைவர் திரு. அலெக்சாண்டர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த பேரம் வாணிக ரீதியானது எனவும் ஏவுகணை தொழில் நுட்பக் கட்டுப்பாட்டை மீறியது அல்ல எனவும் அவர் நேற்று முன்தினம் மொஸ்கோவில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்தார்.

# போட்டிக் குழுக்கள் மோதல்

(சிறீநகர்)

காஷ்மீர் பள்ளத்தாக்கில் நேற்று முன்தினம் அவன்புராவில் இரண்டு போட்டித் தீவிரவாதக் குழுக்களுக்கிடையில் நடைபெற்ற மோதலில் ஐந்து பேர் இறந்துள்ளனர். பதினைந்து பேர் வரையில் காயமுற்றனர்.

### அரச பத்திர பேர ஊழல்

# சம்பந்தப்பட்ட அனைவரும் தண்டிக்கப்படுவார்கள்

## மன்மோகன்சிங்

[டில்லி]

அரசு பத்திர பேர ஊழலில் சம்பந்தப்பட்ட அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என நிதியமைச்சர் மன்மோகன் சிங் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் திருவனந்தபுரத்தில் புதியபொருளாதாரக்கொள்கை மற்றும் வளர்ச்சி பற்றிப் பேசும் போதே அவர் இதைத் தெரிவித்தார்.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு குற்றவாளிகள் தண்டிக்கப்படும் இத்தகைய விரைவான நடவடிக்கை எடுக்கப்படுவது இதுவே முதல்தடவை எனத் தெரிவித்தார்.

அரசுபத்திர பேர ஊழல் புதிய பொருளாதாரக் கொள்கையின் தோல்வியை குறிப்பதாக கூறப்படுவதனை மறுத்துப் பேசிய அமைச்சர் எதுவுமே உண்மை நிலையில் இருந்து விலகி நிற்க முடியாது. வங்கிகளுக்கு அளித்த வாய்ப்புக்களையும் அதன் குறைபாடுகளையும் சிலர் தவறாக பயன்படுத்திக் கொண்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யூகோ வங்கியின் நிர்வாக இயக்குனர் சி. பி. ஐ.யினால் இப்பேரஊழல் தொடர்பாக விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

### யப்பானின் பாராளுமன்ற

# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ராஜினாமா

(டோக்கியோ)

யப்பானிய துருப்புக்களை ஐ. நா. அமைதிகாக்கும் வேலையில் ஈடுபடுத்துவதற்கான மசோதாவை நிறைவேற்றாமல் செய்வதற்கு முட்டுக்கட்டை போடும் விதமாக யப்பான் பாராளுமன்ற கீழ்ச்சபையின் அனைத்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர்.

மேலும் திடீர் பொதுத் தேர்தலை நடத்துமாறு அவ் எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

நேற்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ள கீழ்ச்சபையில் ஆளும் லிபரல் ஜனநாயக கட்சிக்குபெரும்பான்மை பலம் கணிசமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### றியோடி ஜெனரோவில்

# நவாஸ் ஷெரிபுடன் ராவ் ஒரு மணி நேரம் பேச்சு

(றியோடிஜெனரோ)

பாகிஸ்தான் பிரதமர்நவாஸ் ஷெரீப்பை இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் நேற்று முன்தினம் றியோடிஜெனரோவில் சந்தித்து சுமார் ஒன்றே கால் மணித்தியாலம் வரையில் உரையாடியுள்ளார்.

இவ் உரையாடலைத் தொடர்ந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்த பி வி. நரசிம்மராவ் சமீபத்திய வாரங்களில் பாகிஸ்தானிய- இந்திய உறவுகளில் ஓர் பின்னடைவு இருந்து வருவதாகவும் திருப்திகரமாக அமையவில்லை எனத் தெரிவித்த அவர் இவ் இருநாடுகளும் இதிலிருந்து மீளவேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும் இருநாடுகளுக்கு இடையிலும் தொடர்புகளையும் உரையாடல்களையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இவ்உரையாடல்கள் நேர்மையானதாகவும் மனந்திறந்து உரையாடுவதாகவும் தெரிவித்தார்.

இப்பேச்சுக்கள் குறித்து பாகிஸ்தான் பிரதமர் திரு. நவாஸ்ஷெரீப் கூறுகையில்இவ் உரையாடல்கள் தொடர்ந்து நடைபெறும் எனவும் வெளிநாட்டுச் செயலர்கள் நிலையிலும் வேறு தொடர்புகளும இருநாடுகளுக்கிடையே இருக்கும் என இரு தலைவர்களும் கருத்து தெரிவித்தனர்.

# சார்க் சபாநாயகர் மாநாடு கொழும்பில் ஆரம்பமாகியது

# புதனன்று நூல் வெளியீடு

''உணவுத்தேவைகளும் உற்பத்தி இலக்குகளும் என்ற

# பொலிஸ் முகாமை அகற்ற அவசர வேண்டுகோள்

ஈட்டும் வரை போர் ஓயாது என்றும் இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்னா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்னா வின் இக்கூற்று சிறிலங்கா அரசியலில் பலம் பெற்று விட்ட ஓர் இராணுவ உயர் அதிகாரியின் தான்தோன்றித்தனமான கூற்று என்று கூறிவிட முடியாது. சிறிலங்கா அரசியல்வாதிகளினதும் இராணுவத் தரப்பினரதும் ஒருங்கிணைந்த ஓர் முடிவின் வெளிப்பாடேயாகும்.

இம்மாதத்தின் தொடக்கத்தில், சிறிலங்கா பிரதம மந்திரியும் பாதுகாப்பு இணை அமைச்சருமான டிங்கிரி பண்டா விஜயதுங்கா இருமாதங்களுக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வென்றார். பின்னர் அரசாங்கத் தரப்பினர் பிரதமர் எதை அடிப்படையில் வைத்துக் கூறினார் என்று தெரியாது. அவர் கூறியது போன்று இரண்டு மாதங்களுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என மறுப்புத் தெரிவித்திருந்தனர். ஆனால், அரசாங்கம் தெரியாது எனக் குறிப்பிட்டமை வெறும் ஏமாற்று ஆகும். வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகிய வேளையில், ஓர் பாதுகாப்பு அமைச்சரும், பிரதமருமானவர் எவ்வித அடிப்படையும் இல்லாமல் பேசுகிறார் எனக் கூறுவது முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சியாகும்.

பிரதமர் டி. பி. விஜயதுங்காவின் கூற்றை அரசாங்கம் ஒருவாறு மழுப்பு முற்பட்ட வேளையில், ''வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. இரண்டு கட்டங்களாக அத்திட்டம் செயற்படுத்தப்படும். இதில் முதற் கட்டம் அரசாங்கம் தன்னிடமுள்ள படைகளின் முழுச் சக்தியையும் பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் பலத்தை முற்றாக அழிக்க நடவடிக்கை எடுக்கும்''. என பதில் பாதுகாப்பு இணை அமைச்சரான ஜோன் அமரதுங்கா கடந்த வார ஆரம்பத்தில் பலாலி இராணுவ முகாமில் பேசும்போது தெரிவித்தார். அதாவது, பாதுகாப்பு அமைச்சர் மாறி பதில் பாதுகாப்பு அமைச்சர், இராணுவ தளபதிகள் மாறி தளபதிகள், இராணுவ தீர்வு பற்றியே பேசுகின்றனர். அதற்கு ஏற்றால் போன்று நடவடிக்கைகளையும் மேற்கொண்டும் வருகின்றனர்.

இந்நிலையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இவ் வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட தான் உறுதி பூண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை தன்னுடன் வடக்கு - கிழக்குப் பிரச்சினை குறித்துப் பேசும்போது தெரிவித்ததாக அகில இலங்கைக் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் மோதிலால் நேரு தெரிவித்துள்ளார். ஆனால் பிரச்சினையை எவ்வாறு எப்படித் தீர்க்கப் போகிறார் என்பதை திரு. பிரேமதாசா தெரிவிக்கவில்லை.

ஆனால், காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் இதன் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசாங்கத்தின் இராணுவ அணுகுமுறையைச் சாடியிருப்பதில் இருந்து திரு. பிரேமதாசாவும் இராணுவத் தீர்விலேயே முழுக்கவனமும் செலுத்துவதும் புரியவரும். அதாவது இராணுவத் தளபதியில் இருந்து ஜனாதிபதி வரை இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதிலேயே குறியாகவுள்ளனர்.

இவ்வாறாக, இராணுவத்தீர்வு ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு ஒட்டுமொத்தமாகச் செயற்பட்டு வரும் சிறிலங்கா அரசாங்கத்தின் உண்மைச் சொரூபத்தை தமிழ் மக்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். பேச்சுவார்த்தை சமாதானத் தீர்வு என்பவையெல்லாம் வெறும் கண்துடைப்பேயாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில், தமிழ் மக்களைப் படுகொலை செய்து அவர்கள் தாயகத்தைச் சிதைத்து கபளீகரம் செய்து தமிழர் தேசியத்தை அழித்துவிட சிங்களப் பேரினவாதம் தீவிரமாகச் செயற்படுகின்றது. இதனை எதிர்த்துப் போராடாத எந்தத் தமிழனும் பின்னர் வருந்த வேண்டிவரும், ஆனால் அப்பொழுது வருந்துவதால் பயன் ஏற்பட்டுவிடமாட்டாது.

ராக்கட் தொழில் நுட்பம்

# வாக்குறுதி அளித்தபடி இந்தியாவிற்கு அளிப்போம்

(மொஸ்கோ)

இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்தபடி ராக்கட் தொழில் நுட்பத்தை வழங்க தமது ஸ்தாபனம் நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளதாக ரஷ்ய விண்வெளி ஏஜென்சியின் தலைவர் திரு. அலெக்சாண்டர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த பேரம் வாணிக ரீதியானது எனவும் ஏவுகணை தொழில் நுட்ப கட்டுப்பாட்டை மீறியது அல்ல எனவும் அவர் நேற்று முன்தினம் மொஸ்கோவில் தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்தார்.

நாத் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# போட்டிக் குழுக்கள் மோதல்

(சிறீநகர்)

காஷ்மீர் பள்ளத்தாக்கில் நேற்று முன்தினம் அவன்புராவில் இரண்டு போட்டித் தீவிரவாதக் குழுக்களுக்கிடையில் நடைபெற்ற மோதலில் ஐந்து பேர் இறந்துள்ளனர். பதினைந்து பேர் வரையில் காயமுற்றனர்.

பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீபை இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் நேற்று முன்தினம் றியோடிஜெனரோவில் சந்தித்து சுமார் ஒன்றே கால் மணித்தியாலம் வரையில் உரையாடியுள்ளார்.

இவ் உரையாடலைத் தொடர்ந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்த பி.வி. நரசிம்மராவ் சமீபத்திய வாரங்களில் பாகிஸ்தானிய- இந்திய உறவுகளில் ஓர் பின்னடைவு இருந்து வருவதாகவும் திருப்திகரமாக அமையவில்லை எனத் தெரிவித்த அவர் இவ் இருநாடுகளும் இதிலிருந்து மீளவேண்டும்.

மேலும் இருநாடுகளுக்கு இடையிலும் தொடர்புகளையும் உரையாடல்களையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இவ் உரையாடல்கள் நேர்மையானதாகவும் மனந்திறந்து உரையாடுவதாகவும் தெரிவித்தார்.

இப்பேச்சுக்கள் குறித்து பாகிஸ்தான் பிரதமர் திரு. நவாப் ஷெரீப் கூறுகையில் இவ் உரையாடல்கள் தொடர்ந்து நடைபெறும் எனவும் வெளிநாட்டுச் செயலர்கள் நிலையிலும் வேறு தொடர்புகளும இருநாடுகளுக்கிடையே இருக்கும் என இரு தலைவர்களும் கருத்து தெரிவித்தனர்.

# சார்க் சபாநாயகர் மாநாடு கொழும்பில் ஆரம்பமாகியது

சார்க் நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற சபாநாயகர்கள் இரண்டு நாள் மாநாடொன்றை கோட்டை சிறி ஜெயவர்த்தனபுர பாராளுமன்றக் கட்டிடத்தில் நேற்று ஆரம்பித்துவைத்தார்கள்.

தொடர்ந்து நடைபெறும் முதலாவது செயலமர்வின் போது சார்க் சபாநாயகர்கள் அமைப்பின் வருங்கால திட்டங்களையும் சார்க் பாராளுமன்ற அங்கத்தவர்கள் குழுக்களை ஏற்படுத்துவது பற்றிய விடயங்களும் இது தொடர்பாக அவர்களது மாநாடொன்றைக் கூட்டுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இன்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது செயலமர்வின் போது பாராளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புதல, சிறுபான்மை அங்கத்தவர்களின் உரிமைகள் பாராளுமன்றில் கடைப்பிடிக்க வேண்டிய சிறப்புரிமைகள் சட்ட ஒழுங்கு முறைகள் நீதிமன்ற விசாரணையில் உள்ள விடயங்களை விவாதித்தல் தொடர்பான சட்டம் என்பன தொடர்பாக சபாநாயகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நிலைப்பாடு என்பன விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# தோட்டத்தொழிலாளர் வேலை நிறுத்தம்

[கொழும்பு]

அக்கரபத்தனை பகுதியில் இருக்கும் ஹோம்வூட் தோட்டத்தில் வேலை நிறுத்தம் கடந்த பத்து நாட்களாகத் தொடர்ந்து நடைபெறுகின்றது கடந்த வாரத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்ததால் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தை தொடர்ந்து நடத்துவதென முடிவு செய்துள்ளன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தொடரப்பட்டிருக்கும் வழக்கை தோட்ட நிர்வாகம் வாபஸ் பெற வேண்டும், விளையாட்டு மைதானத்தை மீண்டும் தோட்டத் தொழிலாளர்களுக்கே வழங்க வேண்டும், வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளின் பேரிலேயே இவ் வேலை நிறுத்தம் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

கொக்கட்டிச்சோலை படுகொலை

# ஒரு வருடத்தின் பின்பும் நஷ்டஈடு வழங்கவில்லை

[கொழும்பு]

கொக்கட்டிச் சோலை படுகொலைகள் நடைபெற்று ஒரு வருடமாகியும் இப்படுகொலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசினால் எந்த விதமான நஷ்டஈடும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நீதிபதி ஜெயலத் தலைமையிலான விசாரணைக் குழு மேற்படி சம்பவங்களில் இறந்தவர்களின் குடும்பத்தினர் காயமடைந்தோர், வீடுகளையும் தமது பொருள்களையும் இழந்தோருக்கு நஷ்ட ஈடு வழங்கப்படல் வேண்டும் என்றும் அந்நஷ்டஈட்டுத் தொகை விபரங்களையும் சிபார்சு செய்திருந்தது

எனினும் ஒரு வருடம் பூர்த்தி ஆகியும் எதுவிதமான கொடுப்பனவுகளும் இதுவரை அரசினால் வழங்கப்படவில்லை.

## புதனன்று நூல் வெளியீடு

''உணவுத்தேவைகளும் உற்பத்தி இலக்குகளும் என்ற புள்ளி விபர தகவல் கைநூல் வெளியீட்டு விழாவும் ஆய்வரங்கும் புதனன்றுமாலை மூன்று மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் வெளியிடப்படும் இத் தகவல் கைநூலின் முதற் பிரதியினை தமிழீழ விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் இளங்குமரன் அவர்கள் பெறவுள்ளார். நூல் அறிமுகவுரையினை யோ யோகி அவர்கள் நிகழ்த்த நூல் ஆய்வுரைகளை இளைப்பாறிய விவசாய உதவிப் பணிப்பாளர் சி.ஜெயரட்ணம், யாழ் பல்கலைக்கழக பொருளியற் துறை விரிவுரையாளர் க.கந்தையா, யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் வைத்திய கலாநிதி முருகானந்தம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## சாரணர் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தைச்சேர்ந்த யாழ். கோட்டம் வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த சகல சாரணர் குருவைச்சாரணர் தலைவர்கள் ஆகியோருக்கான விசேடகூட்டமொன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.15 இற்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை சாரணர் சேவை வாரம் ஆரம்பமாகும் எனவும் யாழ், மாவட்ட சாரணர் சங்கத்தின் உதவிமாவட்ட ஆணையாளர்கள் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாலை 4-00 மணிக்கு நடைபெறும் எனவும் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் விசேட கூட்டம்பிற்பகல் 3 00 மணிக்கு சங்கானைசைவப்பிரகாசா வித்தியாலயத்தில்நடைபெறும்எனவும்சாரணர் கிளைச்சங்கஉதவி மாவட்ட ஆணையாளர் திரு.இ.ராஜ்குமார் அறிவித்துள்ளார். (பா)

# பொலிஸ் முகாமை அகற்ற அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

மடுல்சீமை ரோபேரி குரூப்பில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் முகாமை அங்கிருந்து அகற்றுமாறுகோரி மீகாகியூல் பிரதேசசபை உறுப்பினர் ஆர். இராஜகுலேந்திரன் ஊவா மாகாண முதல்வர் பேர்சி சமரவீரவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்த முகாமில் உள்ளவர்களால் அப்பகுதி மக்களுக்கு அடிக்கடி இடையூறுகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாக இக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த முகாமில் இருப்பவர்கள் லயன்களில் உள்ள தொழிலாளர்களைப் பீதி கொள்ளச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் இரவுவேளைகளிலும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் தொழிலாளர்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை உருவாகியுள்ளது.

எதிர்க்கட்சி எம்.பியை

# தேசத்துரோகி எனக் கூறும் சுவரொட்டிகள் கொழும்பில்

( கொழும்பு )

கொழும்பு நகர சபை எல்லைக்குள் தன்னை அவமானப்படுத்தி தேசத்துரோகி என அடையாளமிட்டு சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளன. இவற்றுக்கு பின்னணியில் செயல் பட்டவர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என கொழும்பு மாவட்ட எம்பி நிமால் சிறிபால டிசில்வா பதில் பொலிஸ்மா அதிபர் பிராங்க்டி சில்வாவை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது இச் சுவரொட்டிகளில் வெளியீட்டாளர்களது, பதிப்பாளரது அல்லது எழுதியவரது பெயர், விலாசம் போன்ற விபரங்கள். குறிப்பிடப் படவில்லை எனக்கு அவமானத்தை விளைவிக்கும் நோக்கத்தில் வெளியிடப் பட்டுள்ளன. எனவே இது தொடர்பானவிசாரணைகளை நடாத்தி சட்ட விரோதமான பங்கு மேற்படுத்தும் நபர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும் அக்கடிதத்தில் கேட்கப் பட்டுள்ளது.

# மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்தியர் பற்றாக்குறை

மந்திகை வைத்தியசாலையில் நீண்ட காலமாக நிரந்தர வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படாததால் வைத்திய அதிகாரிகள்பற்றாக்குறை அதிகரித்து வருகிறது.

இவ் வைத்தியசாலையில் தொண்டர் வைத்திய அதிகாரிகளே நியமிக்கப்பட்டுவருகின்றனர். நோயாளிகளின் பெருக்கத்திற்கேற்ப நிரந்தரவைத்திய அதிகாரிகள் இல்லாததால் நோயாளிகள் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர்.

இதே வேளை இவ்வைத்தியசாலையில் இருந்து வந்த மாவட்டவைத்திய அதிகாரியும் யூலை மாதம் முதல் ஒய்வு பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

இது விடயமாக வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்சுடன் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

# ஈழநாதம்

## ஏவுகணை உதிரிப்பாகங்கள் பிரிட்டனிடம் வாங்கியவையே

### இந்திய வெளியுறவு அமைச்சு

(டில்லி)

இந்தியா தரையிலிருந்து வானத்துக்குத் தாவும் ஏவுகணை உற்பத்திக்குப் பயன்படுத்திய உதிரிப் பாகங்கள் பிரிட்டனிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்று இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது இந்தப் பாகங்கள் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டவை என்று லண்டன் சண்டே ரைம்ஸ் பத்திரிகைச் செய்தியையும் வெளியுறவு அமைச்சு மறுத்துள்ளது.

பிரிட்டிஷ் அரசின் அங்கீகாரத்தைப் பெற்றே இவை முறைப்படி இறக்குமதி செய்யப்பட்டன என்று வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

இந்தப் பாகங்களைக்கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் 1986 இல் ஆரம்பிக்கப்பட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறப்பட்டதென்றும் இந்திய வெளியுறவு அமைச்சுத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஏவுகணை உதிரிப் பாகங்களை மாத்திரமல்ல வேறுபல தொழில் நுட்பங்களையும் இந்தியா பிரிட்டனிடமிருந்து சட்டவிரோதமாகப் பெற்றுள்ளதாக அந்தச்செய்தி கூறுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீப் அரசமுறைப் பயணம் ஒன்றை பிரிட்டனுக்கு மேற்கொள்ளவிருக்கும இத்தருணத்தில் இந்தச் செய்தி வெளிவந்திருக்கிறது.

## சாந்தன் உடல் தகனம்

(தஞ்சாவூர்)

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி வைத்தியசாலை சவச்சாலையில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த குண்டு சாந்தனின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை தகனம் செய்யப்பட்டது

இந்த வைத்தியசாலையில் சாந்தனின் உடலைத் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வருவதுகுளிரூட்டிசாதனத்திற்கு பதிப்பை ஏற்படுத்துமெனவும் அதனை வேறு எங்காவது மாற்ற வேண்டுமெனவும் வைத்தியசாலை அதிகாரிகள் கடிதம்மூலம் கேட்டிருந்தனர்

இதையடுத்தே அவரது உறுப்பின் ஒரு பகுதியை மேலதிக விசாரணைக்காக வைத்துக்கொண்டு ஏனையவற்றை திருச்சிராப்பள்ளி பொலிஸார் தகனம் செய்துள்ளனர்.

## யூன் மாத வவுச்சர்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

ஒய்வூதியக்காரர்களுக்கான யூன் மாதத்திற்குரிய பென்ஷன்

## "சூழல் பாதுகாப்பு வாசகப் போட்டி"

'சூழல் பாதுகாப்பு,' 'காடு வளர்ப்பு.' 'சூழல் மாசடைதல்,' 'நீர்ப் பயன்பாடு,' கருத்துக்குப் பொருத்தமான சிந்திக்க வைக்கும் வாசகங்களை (SLOGANS) எழுச்சியூட்டும் முழக்கங்களை ஒரு வரி அல்லது இரண்டு வரிகளில் எழுதியனுப்புங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த வாசகங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

உறைமீது 'சூழல் பாதுகாப்பு வாசகப் போட்டி' என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டிய முகவரி.

சூழல் பாதுகாப்புப் பிரிவு,
தமிழீழ ஆய்வு நிறுவனம்,
தலைமைச் செயலகம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வாசகங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01. 07. 1992

(4558)

## மரண அறிவித்தல்

### திரு. மா. வேலுப்பிள்ளை

வடமாகான தெங்கு பனம்பொருள் கூட்டுறவு ச. சமாச செயலாளரும், தென்மராட்சி தெங்கு பனம் பொருள் கூட்டுறவு ச. கொத்தணி தலைவரும், கொடிகாமம் தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கத்தலைவரு

புதுடில்லி

## மிருகக்காட்சி சாலையில் நாய்கள் மான்களை தின்றன

[டில்லி]

புதுடில்லி மிருகக்காட்சிச் சாலையில் இருந்த 20 மான்களை மிருகக்காட்சி சாலை ஊழியர்களின் வளர்ப்பு நாய்கள் வேட்டையாடியுள்ளன

புதுடில்லி பாராளுமன்ற உபதேர்தலில் வாக்களிக்க என அவ் ஊழியர்கள் விடுமுறையில் சென்றிருந்தனர். அப்போதே அவர்களின் வளர்ப்பு நாய்கள் மான்களை வேட்டையாடியுள்ளன.

இது தொடர்பாக நான்கு ஊழியர்கள் வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். மான்கள் இருந்த இடத்திற்கு நாய்கள் எப்படி வந்தன என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அஸ்பெஸ்டஸ் உற்பத்தி கட்டுப்படுத்தத் தீர்மானம்

[ கொழும்பு ]

அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளின் உற்பத்தியை இலங்கையில் கட்டுபபடுத்த அரசு தீர்மானித்துள்ளதாக அறியபபடுகின்றது.

இந்த உற்பத்தி செய்யப்படும் அஸ்பெஸ்டஸ் சிறு புற்றுநோய் பரவுவதற்கு ஒரு காரணமாய் அமைநதுள்ள தாக மத்திய சூழல் அதிகார சபையின் அறிக்கையில் தெரிவிககப் பட்டுள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளினால் மனித ஆரோக்கியத்திற்கு ஏற்படும் அபாயததை இனங்கண்டு பல நாடுகள் இக் கூரைத் தகடுகளின் உற்பத்தியை இடை நிறுத்தி அவற்றை வேறு நாடுகளில் இருந்து இறககுமதி செய்வதையே விரும்புகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (05)

## ஓராண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை திரணா
(செல்வி ஜெயராணி பாலசுப்பி மணியம்)
திதி 17. 06. 1992

'திரணா' எனும் பெயர்பூண்டு திடமுடனே களமாடுந்
தீரமதை நினைந்தேங்கி நிற்கின்றோம் பெருமையிலே
இரங்கி யென்ன? அம்மாவுன் இதய ஒலிச் சுவட்டினிலே
என்றென்றும் நாமிணைந்து ஏற்றிடுவோம்புலிக்கொடியே

உன்கனவு நனவாக உழைக்கின்றார் உன்தோழர்
உலகமெல்லாம் திகைத்திடவே ஓட்டுகின்றார் உலுத்தர்களை
நின்தெண்ணம் ஈடேற நீண்டநாள் இல்லையம்மா
நிலையான தமிழீழம் நிறுவிடுவோம் இதுஉறுதி!

## பத்மநாதனை ஆஜராகுமாறு நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

புலிகளுக்கு வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களைப் பெற்று விநியோகித்து வரும் பத்மநாதன் அல்லது குமரன் என அழைக்கப்படும் நபர் தற்போது பாங்கொக்கில் இருப்பதாக தெரிய வருவதாகவும், இவரை அடுத்த மாதம் 7-ஆம் திகதி சென்னை நீதிமன்றில் ஆஜராகுமாறும் இவர் ஒரு இலங்கையைச் சேர்ந்த உடுப்பிட்டி வாசி எனவும் நீதிபதி சித்திக் இவரை நீதிமன்றில் ஆஜராக அல்லது சரணடையுமாறு அறிவித்துள்ளார்.

## எழுதுவினைஞர் பரீட்சை மூலம் தெரிவாகிய 16 பேருக்கு வங்கியில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் பதவிக்கான போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களை வங்கியில் உள்ள வெற்றிடங்களுக்கு நிரப்ப முதற்கட்டமாக 16 பேர் தேசிய சேமிப்பு வங்கிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி போட்டிப்பரீட்சை மூலம் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 100 பேரில் புள்ளிகளின் அடிப்படையில் 16 பேருக்கு அடுத்த கிழமை நியமனம் வழங்கப்படும்என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

## வெளிவாரி மாணவருக்கு மற்றுமொரு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான மற்றுமொரு கருத்தரங்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாக உள்ளது.

கலை, வர்த்தகம் ஆகிய துறைசார்ந்த பாடநெறிகளும் ஏனைய உப பாடநெறிகளிலும் மேற்படி கருத்தரங்கு நடைபெற உள்ளது.

இக் கருத்தரங்கு முதலாம் வருட பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்காக அமைவதால் மேற்படி பரீட்சைக்கு வேண்டிய இறுதித் தயாரிப்புவேலைகளை இக்கருத்தரங்கு பூர்த்தி செய்யுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. (க)

### ஜெயலலிதா

அத்துடன் ஜெயலலிதா விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடுமையான நிலையை எடுத்துள்ளார். அது எமது செயற்பாடுகளுக்கு உந்துதலாக உள்ளது எனவும் கிளான்ஸி பெர்னாண்டோ கூறியுள்ளார்

### பதினொரு

தான நீதிவான் சிந்தாத்துரை பர்ணந்து ஆகியோர் உரையாற்றினர்

இத்தினத்தில் மாட்டுவண்டில் சவாரிப் போட்டியும் இடம் பெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

16- 06- 1992

வீர ஜனனம் 1



வீரச் சாவு 16

தலைமைச் செயலகம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வாசகங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01. 07. 1992

(4558)

## மரண அறிவித்தல்

### திரு. மா, வேலுப்பிள்ளை

வடமாகான தெங்கு பனம்பொருள் கூட்டுறவு ச. சமாச செயலாளரும், தென்மராட்சி தெங்கு பனம் பொருள் கூட்டுறவு ச. கொத்தணி தலைவரும், கொடிகாமம் தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கத்தலைவருமான திரு. மா. வேலுப்பிள்ளை அவர்கள் 15-6-1992 அதிகாலை மாரடைப்பால் மரணமாகிவிட்டார் எனும் செய்தியை தெ. ப. பொ. கூ. சங்கங்கள் சார்ந்த சகல கூட்டுறவாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.


விசேட குறிப்பு:-

மேற்படி சம்பவத்தையொட்டி இன்று நடைபெறவிருந்த சங்கங்களின் மாதாந்தக் கருத்தரங்கு 18-06-1992 வியாழன் காலை 10-30 மணிக்கு நடைபெறும்.

தலைவர்,
வடமாகான தெ. ப.பொ.கூ. சங்கங்களின் சமாசம்,
499, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4559)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயக மண்ணில்
07-08-1971

ஜேர்மனியில் இறைவன் இணைப்பில்
03-05-1992

### செல்வன் கமலநாதன் (கண்ணன்) இராசையா

மலர்ந்து மணம் வீசும் - வேளை
மரண தேவதையை அணைத்த - எங்கள்
குடும்பத்தின் மாணிக்கமே கடைக்குட்டி கண்ணா
காலமெலாம் இனிஉனை எங்கே காண்போம்

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

73, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

உன்பிரிவால் கலங்கும்
குடும்பத்தினர்
[2680]

சாந்தனின் உடலைத் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வருவதுகுளிரூட்டிசாதனத்திற்கு பதிடபை ஏற்படுத்துமெனவும் அதனை வேறு எங்காவது மாற்ற வேண்டுமெனவும் வைத்தியசாலை அதிகாரிகள் கடிதம்மூலம் கேட்டிருந்தனர்

இதையடுத்தே அவரது உறுப்பின் ஒரு பகுதியை மேலதிக விசாரணைக்காக வைத்துக்கொண்டு ஏனையவற்றை திருச்சிராப்பள்ளி பொலிஸார் தகனம் செய்துள்ளனர்.

### யூன் மாத வவுச்சர்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியக்காரர்களுக்கான யூன் மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ் செயலகத் திறகுஎடுத்துவரப்பட்டுள்ளன

இப்பென்ஷன் வவுச்சர்கள் அடுத்த கிழமை உரியவர்களுக்கு வினியோகிக்கப்படும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

### காணவில்லை

ஓமந்தை, மாளிகை, சேமமடுவைச் சேர்ந்த 44 வயதான முருகேசு சிவகுரு என்பவரை கடந்த மூன்றாம் திகதி முதல் காணவில்லை. 4 அடி 6 அங்குல உயரமான இவர் கடைசியாக வெள்ளையில் நீலக்கோடிட்ட சேட்டும், நீலக்கோடிட்ட சாரமும் அணிந்திருந்தார்.

இவர் பற்றிய தகவல் தெரிந்தால் மு. சிவகுரு மாளிகை சேமமடு ஓமந்தை என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### திறப்புவிழா

(புங்குடுதீவு)

மண்மீட்புப் போரில் மரணித்த தீவகப்பகுதியைச் சேர்ந்த வீரவேங்கை சாம்சன் [ஞானம் ஜெயரவி ஊர்காவற்றுறை], கப்டன்வானதி [பத்மசோதி சண்முகநாதபிள்ளை - நயினாதீவு], வீரவேங்கை நளா [லலிதாதேவி நடராசா- புங்குடுதீவு], வீரவேங்கை கார்த்திகா [வசந்தா நடராசா வேலணை] ஆகிய மாவீரர்களின் நினைவாக அரியாலை கணேசன் தோட்டம் சாம்சன் குடியேற்றத் திட்டத்தில் தங்கியுள்ள தீவக மக்களுக்கென புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'சாம்சன்' பாலர் பாடசாலை 'வானதி' படிப்பகம் 'நளா' விளையாட்டு மைதானம் 'கார்த்திகா' சிறுவர் பூங்கா என்பவற்றின் 'திறப்பு விழா' இன்றுபிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் இவ் விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (22)



## வீரவேங்கை திரணா

### (செல்வி ஜெயராணி பாலசுப்பிரமணியம்)

திதி 17. 06. 1992

'திரணா' எனும் பெயர்பூண்டு திடமுடனே களமாடுந் தீரமதை நினைந்திங்கே திணறுகிறோம் பெருமையிலே
இரங்கி யென்ன? அம்மாவுன் இதய ஒலிச் சுவட்டினிலே
என்றென்றும் நாமிணைந்து ஏற்றிடுவோம்புலிக்கொடியே

உன்கனவு நனவாக உழைக்கின்றார் உன்தோழர்
உலகமெல்லாம் திகைத்திடவே ஓட்டுகின்றார் உலுத்தர்களை
நினைத்தெண்ணம் ஈடேற நீண்டநாள் இல்லையம்மா
நிலையான தமிழீழம் நிறுவிடுவோம் இதுஉறுதி!

மண்மீட்புப் போரினிலே மனமொன்றிப் போராடி
மாவீரர் வரிசையிலே மங்காப் புகழ் பெற்ற
கண்மணி அனைய எங்கள் ஜெயராணீ ஓராண்டு
கழியுமிற்றை நாளினிலே எம் கண்ணீர் அஞ்சலியே

17 06 92 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவஞ்சலியில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்வாய் மேற்கு
திக்கம்

குடும்பத்தினர்

[2666]

## 2-ம் ஆண்டுநினைவஞ்சலி



தாய் மடியில்:
27-12-1972

தமிழீழ மண்ணில்:
16-06-1990

### வீரவேங்கை தினேஷ் (யோகநாதன் பிரபாகரன்)

கண்ணின் கருமணியாய் காத்திருக்க
மண்ணின் மீட்புக்காய் போர்தொடுக்கும்—எண்ணம்
கொண்டெழுந்தவனே எம் அருமை புத்திரனே இரு
ஆண்டு போனாலும் அழியாது உன் நினைவு.

உயிலங்குளம்,
துணுக்காய்.

பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்

(2651)

றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

16- 06- 1992

வீர ஜனனம்
1 — 2 — 1974



வீரச் சாவு
16 — 6 — 1991

### லெப்டினன்ட் செல்வம்

தர்மதாஸ் - விமலதாஸ்
(பருத்தித்துறை முனை)

வெளிச்சவீடு ஒழுங்கை,
பருத்தித்துறை.

(2679)

## வாகன வரிசை இலக்கம் 15 06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4376

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:-3550

இராணுவம் அனுமதித்த இறுதி வாகன வரிசை இலக்கம்:-3500

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-

42-3726, 42-849 26-7234, 41-9355. 42-9625, 26 786
24-4153. 26-1741, 24-4282. 41-9995, 24-8558. 24-1205,
27-7717, 41-9396, 26-7[illegible]99, 28-587, 26 2979 24-5069,
42-3339, 26-4809, 28-6948, 25-1023, 25-2805 70-9253,

வட பகுதிக்கு உள்ளே வர அனுமதித்த வாகன இலக்கம்:-

41-7563, 26-3250. 28-6020, 41-4194, 40-2249, 24-5707.
28 8229, 41-4129 42 7082. 42 526. 42-2397, 26-2589,
22-6897, 26-4429 41 9759, 41-8031, 27-8999. 24-2288
28-2049. 22-7956. 27-9327, 24-9992, 24-8484. 42-4935,
28-7497 24-4917

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது